டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 20.02.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 201 - Madurai | Online Edition

# வெப்பம் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கும் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!

சென்னை, பிப்.19

தமிழகத்தில், வரும் 21 முதல் 23ம் தேதி வரை 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்க கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இன்று (20.2.25) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். ஒரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2°-3° செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும்.



காலை வேளையில் பொதுவாக லேசான பனிமூட்டம் காணப்படும்.

நாளை முதல் 23.2.25 வரையில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2°-4° செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும்.

24 மற்றும் 25.2.25ல் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும்.




# கீரம்பூர் கிராமத்தில் வேளாண்மை கல்லூரி மாணவிகளின் அனுபவ பயிற்சி

நாமக்கல், பிப்.19

நாமக்கல் மாவட்டம், கீரம்பூர் கிராமத்தில் பிஜிபி வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு அனுபவ பயிற்சி நடந்து வருகிறது. இதில் முதல் கட்டமாக நாமக்கல் மாவட்டம் ஒருகிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி வேளாண்மை சார்ந்த பணித்திட்டங்கள், தகவல்களை ADO, AO அதிகாரிகள் மூலம் தெரிந்துக் கொண்டனர். இந்த பயிற்சி மூலம் ஊர் மக்களுக்கு ஊர் வளங்கள், இங்கு பயிரிடப்படும் பயிர்களின் முக்கியத்துவம் பற்றி எடுத்து கூறப்பட்டது. இதில் ஊர் பொதுமக்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். பின் நாமக்கல் வட்டாரத்தில் உள்ள சிதம்பரப்பட்டி, மரூர்பட்டி, கீழ்சாத்தனூர், ரங்கப்பநாயக்கன்பாளையம், ராசாம்பாளையம் ஆகிய கிராமங்களில் விவசாய பதிவீடு பணிகளை மேற்கொன்று வருகின்றனர். இதில் விவசாயிகளும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இந்த பணி வரும் வெள்ளிக்கிழமை வரை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வரும் 24ம் தேதி பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி யோஜனா திருவிழா

விருதுநகர், பிப்.19

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 24.02.25 அன்று பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி யோஜனா திருவிழா நடைபெற இருக்கின்றது.

இத்திருவிழாவில் விவசாய பெருங்குடி மக்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம் என அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்வி ரமேஷ் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது, பிரதான் மந்திரி கிசான் என்பது இந்தியாவில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதி உதவி கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றது.




அதன் ஒரு பகுதியாக பாரத பிரதமரின் 19வது தவணை விடுவிக்கும் நேரடி நிகழ்ச்சி பீகாரின் பாகல்பூர் மாவட்டத்தில் 24.02.25 அன்று நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியானது இணையவழி வாயிலாக அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வேளாண் விவசாய பெருமக்களுக்கு காட்சிப்படுத்தபட உள்ளது. மேலும் அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தொழில்நுட்ப உரைகள் வழங்க இருக்கின்றார்கள்.

புதிய தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்த கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள்அமைக்கப்பட இருக்கின்றன. எனவே விவசாய பெருமக்கள் பார்வையிட்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். விவசாயிகள் தாங்கள் பெயர்களை முன்பதிவு செய்ய 79043 10808 / 81481 93645 எண்களை தொடர்பு கொள்ளவும்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நிலக்கடலை சாகுபடியில் பண்ணைப் பள்ளி வகுப்பு



சேலம், பிப்.19

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம் வேளாண்மை துறை மூலம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றி நிலக்கடலையில் பண்ணை பள்ளி பாரப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. பயிற்சியில் அட்மா திட்டத் தலைவர் சந்திரசேகரன் கலந்து கொண்டு தலைமையேற்று பேசுகையில் விவசாயிகள் வேளாண்மை துறை அணுகி வேளாண்மை துறை மூலம் செயல்படும் திட்டங்கள் மானியங்கள் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும் பயிற்சியில் சாகுல் அமீத் வேளாண்மை இயக்குனர் பனைமரத்துப்பட்டி கலந்துக் கொண்டு விவசாயிகள் நில உடைமைப் பதிவு செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் விவசாயிகள் உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டங்கள், விதைகள் ஆகியவற்றை மானியத்தில் பெற்று பயன்பெறலாம் என தெரிவித்தார். மேலும் வேளாண் அறிவியல் நிலையம் சந்தியூரில் இருந்து முனைவர் ரவி (பூச்சியியல் துறை) கலந்துக் கொண்டு நிலக்கடலை ரகம் தேர்வு, பருவம், உயிர் உரம் கொண்டு விதை நேர்த்தி, நிலம் தயாரிப்பு ஆகிய தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார். மேலும் பயிற்சில் சுமித்ரா, வட்டார தொழில்நுட்ப மேலாளார், உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆகியோர் கலந்துக் கொண்டு விதை நேர்த்தி பற்றி செயல் விளக்கம் செய்து காண்பித்தனர். பயிற்சியின் இறுதியில் நன்றியுரை உதவி வேளாண்மை அலுவலர் வைர பெருமாள் தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 19.02.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 30 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 24 | 28 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 35 | 40 | 57A | உருளை(ஊட்டி) | 25 | 44 |
| 2 | வெண்டை | 38 | 42 | 58 | மேரக்காய் | 15 | 20 |
| 3 | தக்காளி (நாடு) | 17 | 20 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 28 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 17 | 20 | 60 | கேரட் | 50 | 55 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 40 | 48 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 45 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 30 | 35 |
| 7 | பீர்க்கன் | 40 | 44 | 63 | டர்னிப் | 30 | 35 |
| 8 | சுரைக்காய் | 15 | 18 | 64 | மு.கோஸ் | 15 | 20 |
| 9 | பாகற்காய் | 40 | 44 | 65 | மு.கோஸ்(கலர்) | 0 | 0 |
| 10 | கொத்தவரை | 30 | 35 | 66 | காளிபிளவர் | 25 | 30 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 60 | 68 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 120 | 130 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 24 | 28 | 69 | இஞ்சி | 40 | 50 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 30 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 44 | 48 | 71 | பென்னி பீன்ஸ் | 40 | 48 |
| 16 | பெ.வெங்காயம் | 40 | 44 | 72 | குடமிளகாய் | 44 | 48 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 26 | 73 | ஊட்டி அவரை | 110 | 120 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 46 | | | | |
| 19 | முருங்கை | 70 | 84 | | | | |
| 20 | தேங்காய் | 60 | 64 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 75 | | | | |
| 22 | வாழைக்காய் | 38 | 42 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 50 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 40 | 45 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 60 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 78 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 28 | 32 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 6 | 7 | 81 | மாம்பழம் | 150 | 185 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 70 | 80 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 70 | 74 |
| 40 | கோவக்காய் | 24 | 28 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 55 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 44 | 48 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 35 | 40 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 14 | 18 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 70 | 75 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 20 | 25 | 97 | செவ்வாழை | 95 | 100 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 0 | 0 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 0 | 0 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 75 |
| 52 | புளி | 0 | 0 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 20 | 24 | | | | |
| 55A | துவரை | 0 | 0 | | | | |

# அட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி



நாமக்கல், பிப்.19

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரம் வேளாண்மைத் துறையின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் 67 கவுண்டம்பாளையம் கிராமத்தில் பண்ணை இயந்திரமய மாக்குதல் மற்றும் புதிய இயந்திரங்களை பிரபலப்படுத்துதல் என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயமாலா தலைமை வகித்து வேளாண்மைத் துறை சார்ந்த மத்திய மாநில திட்டங்கள், விவசாயிகளுக்கு தனி குறியீடு வழங்கும் முகாம் நடைபெறுதல் பற்றி கூறி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

இப்பயிற்சியில் வேளாண் உதவி பொறியாளர் தீபா கலந்து கொண்டு வேளாண்மை பொறியியல் துறை சார்ந்த மானியத் திட்டங்கள் பற்றி விரிவாக விவசாயிகளுக்கு கூறி விளக்க மளித்தார்.

இப்பயிற்சியில் திருச்செங்கோடு மகேந்திரா நிறுவன அலுவலர் கலந்து கொண்டு புதிய வேளாண் இயந்திரங்கள், செயல் பாடுகள் மற்றும் மானியங்கள் பற்றி விரிவாக கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் திவாகர், அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றியும் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வாசுகி உழவன் செயலி பதிவிறக்கம் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் கூறினர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். மேலும் கிராம புற அனுபவ பயிற்சிக் காக எலச்சிபாளையம் வட்டாரத்திற்கு வருகைப் புரிந்திருக்கும் PGP – வேளாண்மை கல்லூரி மாணவர்கள் 10 பேர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தனர்.


Rithvik Pipe
PIPING FOR LIFE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
இந்தியாவில் முதல் முறையாக ISI PVC பைப்புகளுக்கு
25 வருட உத்திரவாதம் தரும் ஒரே நிறுவனம்
ஒவ்வொரு பைப்புகான ஆய்வக சோதனை அறிக்கை ஒவ்வொரு பைப்பிலும் QR CODE மூலம் கொடுக்கபட்டுள்ளது.
ஒவ்வொரு பைப்புக்கும் 25 வருட உதிரவாதம் (6 KG - க்கு மேல்)
ஒவ்வொரு ரித்விக் பிவிசி பைப்புகளும் இந்திய தர நிர்ணய பணியகம் (பிஐஎஸ்) நிர்ணயித்த கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தபட்டு தயாரிக்கப்படுகிறது.
ஒவ்வொரு ரித்விக் PVC பைப்புகள் உயர்தர மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தரம் மற்றும் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.
வியாபார தொடர்புக்கு
வெங்கடரமனன் - 7561822226,9645877779
RITHVIK PIPE

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மாநாடு



கோயம்புத்தூர், பிப்.19

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் பாதுகாப்பு ஆய்வுகளுக்கான மையம் 'ஒருங்கிணைந்த ஆரோக்கியக் கோணத்தில் உலக பயிர் பாதுகாப்பு ஆராய்ச்சி' (OHPGGR-2025) என்ற தலைப்பில் சர்வதேச மாநாட்டை நேற்று தொடங்கி வைத்தது. இம்மாநாடு, பயிர் பாதுகாப்பு ஆராய்ச்சியில் சமீபத்திய முன்னேற்றங்களைப் பற்றிய அறிவும் அனுபவமும் பகிர்ந்து கொள்ள உலகளாவிய நிபுணர்களை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பாரம்பரிய முறையில் இறைவணக்கம் மற்றும் விளக்கேற்றல் நிகழ்வுடன் துவக்க நிகழ்ச்சிக்கு பின், வரவேற்புரை பூச்சியியல் துறையின் தலைவர், முனைவர் மா.முருகன் வழங்கினார். பயிர் பாதுகாப்பு மையத்தின் இயக்குநர் முனைவர் மூ.சாந்தி மாநாட்டின் முக்கியத்துவம் மற்றும் நோக்கங்களை விளக்கினார். விழாவிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், முனைவர் V.கீதாலட்சுமி தலைமை தாங்கினார். தலைமை உரையில், நிலையான வேளாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு நடைமுறைகளை ஊக்குவிப்பதில் பல்கலைக் கழகத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்தினார். வேளாண் துறையில் உள்ள பல்வேறு சிக்கல்களை சமாளிப்பதற்காக துறை சார் ஆய்வுகள் மற்றும் கூட்டாண்மையின் முக்கியத்து வத்தை எடுத்துக்காட்டினார்.

இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சகத்தின் பயிர் பாதுகாப்பு ஆலோசகரும் தாவரப் பாதுகாப்பு தனிமைப்படுத்தல் & சேமிப்பு இயக்குநர கத்தினரும் ஆகிய சாமுவேல் பிரவீன் குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாநாட்டைத் தொடங்கி வைத்து முக்கிய உரையை வழங்கினார். சிறப்பு உரையில், முனைவர் சோணைராஜன், பயிர் பாதுகாப்பு ஆராய்ச்சியில் 'ஒருங்கிணைந்த ஆரோக்கியம்' அணுகுமுறையைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

மனித, மிருக, தாவர ஆரோக்கியங்களின் பரஸ்பர உறவை உணர்ந்து, நிலைத்தன்மை வாய்ந்த சுற்றுச்சூழலைக் காக்கும் பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவதன் அவசியத்தை தெரிவித்தார். இது உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்களை குறைக்கவும் உதவும் என அவர் கூறினார். இந்திய பூச்சியியல் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.வி.ராமமூர்த்தி சிறப்பு உரை நிகழ்த்தினார்.

இந்த மாநாடு பல்வேறு தொழில்நுட்ப அமர்வுகள், முதன்மை உரை, உலகளாவிய மற்றும் இந்திய நிபுணர்களின் வழிகாட்டி உரைகள், மற்றும் தொட்டுச்சுவரி (Poster) வழங்கல்களை உள்ளடக்கியதாக உள்ளது. இதில், காலநிலை மாற்றம் மற்றும் தாவர ஆரோக்கியம், புதுவிதமான தாவர நோய்கள் மற்றும் பூச்சிகள், தாவர–நுண்ணுயிர் தொடர்புகள் மற்றும் ஒரே ஆரோக்கியத்தை மையமாகக் கொண்ட மின்னணு தாவர பாதுகாப்பு போன்ற முக்கிய தலைப்புகள் விவாதிக்கப்படுகின்றன.




இந்த மாநாட்டில் இந்தியாவிலும் உலகம் முழுவதிலும் இருந்து 500–க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். இதில் கல்வியியல், ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழில் மற்றும் அரசு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் உள்ளனர். மாநாட்டின் விரிவான சுருக்கங்கள் (VOL I & II), Emerging Frontiers in Plant Health: Experts Perspectives என்ற மொபைல் பயன்பாட்டை துணைவேந்தரும் சிறப்பு விருந்தினர்களும் வெளியிட்டனர். புதிய பயிர் பாதுகாப்பு தயாரிப்புகளை உள்ளடக்கிய கண்காட்சி டாக்டர் சாமுவேல் பிரவீன் குமாரால் திறந்து வைக்கப்பட்டது.

முனைவர் க.அங்கப்பன், பேராசிரியர் மற்றும் தலைவர், தாவர நோயியல் துறை, நன்றி விளக்க உரையை வழங்கினார். இதனுடன் தொடக்க நிகழ்ச்சி நிறைவு பெற்றது. மேலும் மாநாடு அதன் தொழில்நுட்ப அமர்வுகளுடன் தொடர்ந்தது. துவக்க அமர்வில் சுமார் 40 ஓய்வு பெற்ற பயிர் பாதுகாப்பு அறிவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

# கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் கோகோ சாகுபடி பயிற்சி



கன்னியாகுமரி, பிப்.19

கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் கோகோ சாகுபடி மற்றும் அறுவடைக்கு பின்பு உள்ள தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி குலசேகரத்தில் அமைந்துள்ள ரப்பர் கம்பெனி அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் நடைபெற்றது.




கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனம் செயலாளர் பிரதீப் குமார் வரவேற்புரை வழங்கினார். பேச்சிப்பாறை தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம் இணை பேராசிரியர் முனைவர் (வேளாண் விரிவாக்கம்), ராஜ் பிரவின் தனது தலைமை உரையில் கோகோ சாகுபடியின் தேவை குறித்தும், ஊடுபயிராக கோகோ சாகுபடி ரப்பர் மற்றும் தென்னை பயிர்களின் சாகுபடி செய்வதன் வாயிலாக விவசாயிகள் பெரும் லாபம் மற்றும் புதிய கிராமப்புற வேலைவாய்ப்புகளை பற்றி விளக்கி பேசினார்.

மோண்டலிஸ் நிறுவனம் மூத்த தொழில்நுட்ப வல்லுநர் ராஜேஸ்வரன் கோக்கோ சாகுபடி பற்றிய விரிவாக்க பயிற்சியை குறும் படங்கள் வாயிலாக வழங்கினார். இந்த கோகோ சாகுபடி பயிற்சிக்கான ஏற்பாடுகளை இரட்சணிய சேனை சமூக நலம் மற்றும் மேம்பாடு திட்ட பணியாளர் பெனிதா செய்திருந்தார். இப்பயிற்சியில் சுமார் 20 கிராமப்புற பெண்கள் இந்த பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பறவைகள் கணக்கெடுப்பு பற்றி தெரியுமா?



பறவைகள் உலகம் முழுவதும் எப்படி பரவியிருக்கின்றன? எவ்வாறு வாழ்கின்றன? வாழ் விடத்திலும் வானிலையிலும் ஏற்படும் மாற்றங்களால், ஏற்படும் பாதிப்பை அறியவும் பறவைகள் எண்ணிக்கை ஆண்டுதோறும் கூடுதலாகவோ / குறைவாகவோ ஏதேனும் மாற்றம் காண்கிறதா? என்பது உள்ளிட்ட பல்வேறு முக்கிய கேள்விகளுக்கும் பதிலாக இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

**யார் இந்த கணக்கெடுப்பை நடத்துகிறார்கள்?**

ஜிபி பிசி (GREAT BACKYARD BIRD COUNT OF INDIA) என்ற (NON PROFIT ASSOCIATION) ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் 4 நாட்களுக்கு பல்வேறு பகுதியில் இந்த கணக்கெடுப்பு பணி நடைபெற்றது. இந்த கணகெடுப்பு பணியானது காலை 4 மணி முதல் 6 மணி வரையும், மாலையில் 4 மணி முதல் 6 மணி வரை பறவை ஆர்வலர்கள், இயற்கை ஆர்வலர்கள், தன்னார்வலர்களை கொண்டு அங்காங்கு நடத்தப்பட்டது.

**கடந்த ஆண்டு 2024 நிலவரம் எப்படி?**

கடந்த ஆண்டில் 5000க்கு மேற்பட்ட பறவை ஆர்வலர்கள் பங்கேற்று கணக்கெடுப்பு நடத்தி பறவை பட்டியலை இ.பேர்ட் (E.BIRDS) தளத்தில் பதிவான பதிவில் இந்தியா 2வது இடத்தில் உள்ளது.

கடந்த 2024யில் இமயமலையில் உள்ள புல் புல் பறவை வடக்கில் காட்டு புறா, மேற்கு கிழக்கு மற்றும் மத்திய பகுதியில் ரெட் வென்டேட் புல் புல், தெற்கில் காகம் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் ரெட்விஸ் புல்புல் போன்ற பறவைகள் அதிகமாக காணப்பட்டன. கடந்த ஆண்டு 178 வளாகங்களில் பறவை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

**இந்த ஆண்டு எங்காவது கணக்கெடுப்பு நடைபெற்றதா?**

இந்த ஆண்டு 2025 பிப்ரவரி 14 முதல் 18 வரை மதுரை அமெரிக்கன் கல்லூரி வளாகத்தில் 4 நாட்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

**அந்த கணக்கெடுப்பில் என்ன என்ன பறவைகள் இருந்தன?**

20 சிற்றினங்களில் 250 பறவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன்படி, காகம், குயில், மைனா, பள்ளி ஆந்தை, கூகை, இரட்டை வால் குருவி, மாங்குயில், தேன்சீட்டு, செம்போத்து, வால் காக்கை, மரங்கொத்தி, தவிட்டு குருவி, புறா, வெண்மார்பு நீர்க்கோழி, கொக்கு, குருவி, மயில், பச்சைக்கிளி, உண்ணிக் கொக்கு, மடையான் உள்ளிட்ட பல பறவைகள் கல்லூரி வளாகத்திலே இருந்தாக தரவுகள் தரப்பட்டது. இந்த கணக்கெடுப்பு தொடர்ந்து 12 ஆண்டுகளாக இங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.




‘காக்கை குருவி எங்கள் ஜாதி‘ என்று பாடிய பாரதியார் பாடல்படி பறவைகள் வேளாண்மையில் உற்ற தோழனாக இருந்து புழு பூச்சிகளை பிடித்து உண்ணுவதால் பயிர் பாதுகாப்புக்கு உறுதுணையாக இருக்கும்.

வயலில் ஆங்காங்கு பறவை தாங்கிகளை வைத்து பறவைகள் நடமாட்டத்தை அதிகப்படுத்த வேண்டும். இந்த வெயில் காலங்களில் பறவைகளுக்கு தண்ணீர் மற்றும் தானியங்களை உணவாக வைப்போம். அவற்றிற்கு புகழிடமாக நம்முடைய நிலத்தை பயன்படுத்துவோம். பறவைகள் மகசூல் கூட்டுவதற்கான வேலையையும் செய்யும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# திருச்சி இலால்குடி விவசாயிகளுக்கான அக்ரி ஸ்டாக் திட்டம் [AGRISTACK] தொடக்கம்!



திருச்சி, பிப்.19

விவசாயிகளுக்கான அக்ரிஸ்டாக் திட்டத்தின் (AGRISTACK) மூலம் அரசின் மானியத் திட்டங்கள் மற்றும் பலன்களை விவசாயிகள் நேரடியாகப் பெற ஒரு தனிப்பட்ட அடையாள எண் விவசாயிகளுக்கு உருவாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டமானது உற்பத்தி முதல் சந்தைப்படுத்துதல் வரையுள்ள அனைத்து தரவுகளையும் சேமிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு அங்கமாக, திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டார விவசாயிகளுக்கு இத்திட்டமானது திரம்பட செயல்பட விவசாயத்துறை உதவி இயக்குநர் சத்தியப்பிரியா தலைமையில் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலுள்ள விவசாயிகளின் தரவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றார்கள்.

இத்திட்டத்தின் கீழ் வட்டார உதவி வேளாண் அலுவலர்கள் வெற்றிகரமாக பணியாற்றி வருகின்றனர். அவர்களிடமிருந்து கிராம தங்கல் திட்டத்தின் (RAWE) கீழ் பயிற்சி பெறும் எம்.ஆர். பாளையத்தைச் சேர்ந்த நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களான வி.அபிதரன், தி.ஞானவேல், த.தேவா, மா.க.எழிலரசன், க.பரத், ந.தீபன் ராஜ், சி.தினேஷ் குமார், மு.குருபிரசாத், ரா.ஹனீப்முஹம்மது, பி.ஹரிஷ்ரீ மற்றும் ம.இள.இளங்குமரன், அக்ரிஸ்டாக் திட்டத்தின் (AGRI STACK) பயன்கள் மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி அறிந்து கொண்டு விவசாயிகளுக்கு எடுத்துரைத்து, இத்திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பலன்கள் பற்றி விவசாயிகளிடம் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண் அலுவலர்களைத் தொடர்புக் கொண்டு அடையாள எண் பெற்று விவசாயம் சார்ந்த திட்டங்கள் மற்றும் சேவைகளைத் தடையின்றி பெற இப்போதே பதிவு செய்யுங்கள்.


Rithvik Pipe
PIPING FOR LIFE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
இந்தியாவில் முதல் முறையாக ISI PVC பைப்புகளுக்கு
25 வருட உத்திரவாதம் தரும் ஓரே நிறுவனம்
ஒவ்வொரு பைப்புகான ஆய்வக சோதனை அறிக்கை ஒவ்வொரு பைப்பிலும் QR CODE மூலம் கொடுக்கபட்டுள்ளது.
ஒவ்வொரு பைப்புக்கும் 25 வருட உதிரவாதம் (6 KG - க்கு மேல்)
ஒவ்வொரு ரித்விக் பீவிசி பைப்புகளும் இந்திய தர நிர்ணய பணியகம் (பிஐஎஸ்) நிர்ணயித்த கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தபட்டு தயாரிக்கப்படுகிறது.
ஒவ்வொரு ரித்விக் PVC பைப்புகள் உயர்தர மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தரம் மற்றும் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.
வியாபார தொடர்புக்கு
வெங்கடரமணன் - 7561822226,9645877779
RITHVIK PIPE

# கோடை உழவில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கான சிறந்த அணுகுமுறை

நிலையான விவசாயத்தில் பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு எதிராக விவசாயம் சார்ந்த அறிவியல் புரட்சி ஒரு நிலையான போரை எதிர்கொள்கிறது, இது பயிர் விளைச்சலையும் தரத்தையும் கணிசமாகக் குறைக்கும். பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாட்டின் பாரம்பரிய முறைகள் பெரும்பாலும் இரசாயன பூச்சிக்கொல்லி களை நம்பியுள்ளன, அவை சுற்றுச்சூழல், மனித ஆரோக்கியம் மற்றும் நன்மை பயக்கும் உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கும். இந்த சூழலில், நிலையான விவசாய நடைமுறைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த நடைமுறைகளில், கோடை உழவு, பருவகால உழவு என்றும் அறியப்படுகிறது. பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கு மிகவும் பயனுள்ள மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த அணுகுமுறையாக உள்ளது. இந்தக் கட்டுரை கோடை உழவின் பயன்கள், அதன் செயல் முறைகள், நன்மைகள் மற்றும் நிலையான விவசாயத்தை வளர்ப்பதில் அது வகிக்கும் முக்கிய பங்கு ஆகியவற்றை ஆராய்கிறது.

கோடை உழவு என்பது பிரதான பயிரின் அறுவடைக்குப் பின் மற்றும் அடுத்த பயிரின் விதைப்புக்கு முன், பொதுவாக கோடை மாதங்களில் மண்ணை உழுவதை உள்ளடக்குகிறது. இந்த நடை முறை பல நூற்றாண்டுகளாக பயன்படுத்தப்படுகிறது மற்றும் பின்வரும் முக்கிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. மண்ணினை கிளறிவிடுதல், கோடை உழவின் முதன்மை செயல் பாடு மண்ணின் கட்டமைப்பை சீர்குலைப்பதாகும். இந்த இடையூறு மண்ணின் மேற்பரப்பை உறுப்புகளுக்கு வெளிப்படுத்துகிறது, பல மண்ணில் பரவும் பூச்சிகள் மற்றும் நோய்க்கிருமிகளின் வாழ்விடத்தை மாற்றுகிறது.

### சூரிய ஒளி மற்றும் வெப்பநிலைக்கு எதிரான வெளிப்பாடு

மண்ணைத் கிளறிவிடுவது, ஆழமான அடுக்குகளை சூரிய ஒளி மற்றும் அதிக வெப்பநிலைக்கு வெளிப்படுத்துகிறது. இது பல பூச்சிகள், நோய்க்கிருமிகள் மற்றும் களை விதைகளுக்கு ஆபத்தானது. தீவிர சூரியக் கதிர்வீச்சு இந்த உயிரினங்களை உளறச்செய்து அழித்துவிடும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

**காற்றோட்டம் மற்றும் சிதைவுறுதல் :** உழுதல் மண்ணின் காற்றோட்டத்தை மேம்படுத்துகிறது, இது கரிமப் பொருட்களின் சிதைவை ஊக்குவிக்கிறது. இந்த செயல்முறை சில பூச்சிகள் மற்றும் நோய்க்கிருமிகளுக்கான உணவு ஆதாரங்களின் இருப்பை குறைக்கிறது, அவற்றின் உயிர்வாழ்வையும் இனப்பெருக்கத் தையும் கட்டுப்படுத்துகிறது.

**பயிர் எச்சங்களை அல்லது கழிவுகளை புதைத்தல் :** கோடை உழவு பயிர் எச்சங்களை மண்ணில் சேர்க்கிறது. இந்த செயல்முறை தாவரப் பொருட்களின் சிதைவை எளிதாக்குகிறது, பூச்சி, பூச்சிகள் மற்றும் தாவர நோய் நோய்க்கிருமிகளின் வாழ்விடத்தை குறைக்கிறது.

**களை கட்டுப்பாடு :** கோடை உழவு களை விதைகளை மண்ணில் ஆழமாக புதைத்து, அவை முளைப்பதையும், வெளிப்படுவதையும் தடுக்கிறது. இது அடுத்தடுத்த பயிர்களில் களை அழுத்தத்தை கணிசமாகக் குறைக்கும்.

**பூச்சி மேலாண்மை மீதான தாக்கம் :** கோடை உழவு பலவிதமான பூச்சி பூச்சிகளை திறம்பட நிர்வகிக்கிறது, இது பின்வரும் நன்மைகளை வழங்குகிறது.

## I) நீண்ட குளிர்கால நிலைகளை அழித்தல்

மண்ணில் வசிக்கும் குரும்புகள், கூட்டுப்புழுக்கள் மற்றும் வளர்ச்சிதையை நீட்சி செய்யும் பூச்சிகள் போன்ற பல பூச்சி பூச்சிகள் மண்ணில் அதிக குளிர்காலம் செய்கின்றன. உழவு அவற்றின் வாழ்விடங்களை சீர்குலைத்து, பறவைகள் மற்றும் பிற இயற்கை எதிரிகளால் வேட்டையாடப்படுவதை வெளிப்படுத்துகிறது. இது அவர்களின் ஓய்வு நிலைகளையும் சேதப்படுத்துகிறது, இது அவர்களின் மரணத்திற்கு வழிவகுக்கிறது.

**எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு**

**மண்ணில் பரவும் பூச்சிகள் :** வெட்டுப்புழுக்கள், கம்பிப்புழுக்கள், வெள்ளைப்புழுக்கள், வேர்ப்புழுக்கள், சோள துளைப்பான்கள், தண்டு துளைப்பான்கள் மற்றும் மண்ணில் குட்டி போடும் பிற பூச்சிகள்.

**பூச்சிகளின் எண்ணிக்கையை குறைத்தல் :** அவற்றின் வாழ்க்கைச் சுழற்சியை சீர்குலைப்பதன் மூலமும், உணவு ஆதாரங் களைக் குறைப்பதன் மூலமும், கோடை உழவு, அடுத்தடுத்த பயிர்களில் பூச்சி பூச்சிகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைக்கிறது.

**இரண்டாம் நிலைப்பூச்சிகளை அடக்குதல் :** முதன்மைப் பூச்சிகளை நீக்குவது, முதன்மைப் பூச்சிகளை புரவலன்கள் அல்லது உணவு ஆதாரங்களாக நம்பியிருக்கும் இரண்டாம் நிலைப் பூச்சிகளின் மீது அடுக்கடுக்கான விளைவை ஏற்படுத்தும்.

**மேம்படுத்தப்பட்ட பூச்சிக்கொல்லிகளின் செயல்திறன் :** கோடை உழவு மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலமும், பூச்சிக்கொல்லிகள் இலக்கு உயிரினங்களை ஊடுருவிச் செல் வதையும் எளிதாக்குவதன் மூலம் அடுத்தடுத்த பூச்சிக்கொல்லி பயன்பாடுகளின் செயல்திறனை மேம்படுத்தலாம்.

**நோய் மேலாண்மை மீதான தாக்கம் :** கோடை உழவு பல மண்ணில் பரவும் மற்றும் பயிர் எச்சம் அல்லது கழிவுகள் மூலம் பரவும் தாவர நோய்களைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**II) பாதிக்கப்பட்ட தாவரங்களின் கழிவுகளை புதைத்தல் :** பல தாவர நோய்க்கிருமிகள் பாதிக்கப்பட்ட பயிர் எச்சங்களில் அல்லது கழிவுகளில் கிருமிகள் வித்துகளாக உயிர்வாழ்கின்றன. உழவு இந்த எச்சங்களை மண்ணில் ஆழமாகப் புதைத்து, அவற்றின் விரைவான சிதைவை ஊக்குவிக்கிறது மற்றும் அடுத்த பயிரை பாதிக்கக்கூடிய நோய் காரணிகளின் வித்துக்களை குறைக்கிறது.

**எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு**

பூஞ்சை மற்றும் பாக்டீரியா நோய்களான, வாடல் நோய், விதை அல்லது வேர் அழுகல் நோய் மற்றும் தண்டுக்கருகல்.

**நோய் கிருமிகளின் வாழ்வியலை இடையூறு செய்தல் :** கோடை உழவு மண்ணில் பரவும் நோய்க்கிருமிகளின் ஓய்வு அமைப்பான வித்துக்களை சீர்குலைக்கிறது. சூரிய ஒளியின் வெளிப்பாடு, வெப்ப நிலை உச்சநிலை மற்றும் நுண்ணுயிர் செயல்பாடு ஆகியவை அவற்றின் மரணத்திற்கு வழிவகுக்கிறது.

**மேம்படுத்தப்பட்ட மண்ணின் ஆரோக்கியம் :** மண்ணின் காற்றோட்டம், வடிகால் மற்றும் கரிமப் பொருட்களின் உள்ளடக் கத்தை மேம்படுத்துவதன் மூலம், கோடை உழவு மண் ஆரோக் கியத்தை மேம்படுத்துகிறது, இது நோய்களுக்கு எதிராக தாவரங் களின் இயற்கையான பாதுகாப்பை பலப்படுத்துகிறது.

**நோய் கடத்திகளின் எண்ணிக்கை குறைப்பு :** உழுதல் தாவர நோய்க்கிருமிகளை கடத்தும் பூச்சி நோய்க்கிருமிகளின் எண்ணிக்கையை குறைத்து நோயினை கட்டுப்படுத்துகிறது.

**III ) நன்மைகள் :** மற்ற பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உத்திகளுடன் ஒப்பிடும்போது கோடை உழவு பல நன்மைகளை வழங்குகிறது.

**சுற்றுசூழலுக்கு உகந்தது :** இது ஒரு இரசாயனமற்ற அணுகு முறையாகும், செயற்கை பூச்சிக்கொல்லிகளின் மீதான நம்பிக் கையைக் குறைத்து, சுற்றுச்சூழல் மற்றும் மனித ஆரோக்கியத்தில் அவற்றின் எதிர்மறையான தாக்கங்களைக் குறைக்கிறது.

**செலவு குறைந்தவை :** கோடை உழவு என்பது ஒப்பீட்டளவில் குறைந்த விலை நடைமுறையாக இருக்கலாம், குறிப்பாக இரசாயன பயன்பாடுகள் அல்லது சிறப்பு பூச்சி கட்டுப்பாடு முறைகளுடன் தொடர்புடைய செலவுகளுடன் ஒப்பிடும் போது.

**பல்வகையில் நிலையானது :** இது மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதன் மூலமும் வெளிப்புற உள்ளீடுகளின் தேவையைக் குறைப்பதன் மூலமும் விவசாயத்தில் நீண்ட கால நிலைத்தன்மையை ஊக்குவிக்கிறது. கோடை உழவு பலவிதமான பயிர் முறைகளிலும் பல்வேறு வகையான பூச்சிகள் மற்றும் நோய்களை நிர்வகிப்பதற்கும் பயன்படுத்தப்படலாம்.

**களை நிர்வாகம் :** களை விதைகளை புதைப்பதன் மூலம், களைக்கொல்லிகளின் தேவையை குறைக்கிறது. மேலும் உழவு நீர் ஊடுருவல் மற்றும் மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துகிறது, அடுத்தடுத்த பயிரின் வேர் வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்து உறிஞ் சுதலுக்கு பயனளிக்கிறது.

## IV) கவனத்தில் கொள்ளவேண்டியவை

**நேரம் :** கோடை உழவுக்கான உகந்த நேரம் பிராந்தியம், காலநிலை மற்றும் கட்டுப்படுத்தப்பட வேண்டிய குறிப்பிட்ட பூச்சிகள் மற்றும் நோய்களைப் பொறுத்து மாறுபடும். பொதுவாக, இது அறுவடைக்குப் பிறகும், அடுத்த பயிர் விதைப்பதற்கு முன்பும் செய்யப்படுகிறது.

**உழவின் ஆழம் :** உழவின் ஆழம் பயிர் எச்சங்களை புதைக்கவும், மண்ணை தனிமங்களுக்கு வெளிப்படுத்தவும் போதுமானதாக இருக்க வேண்டும். உழவு உபகரணங்களைப் பொறுத்து பரிந்துரைக்கப்பட்ட ஆழம் மாறுபடும்.

**மண் வகை :** கோடை உழவு பொதுவாக நல்ல வடிகால் உள்ள மண்ணில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கனமான களிமண் மண்ணில், மண் சுருக்கத்தைத் தவிர்க்க கவனமாக மேலாண்மை தேவைப்படலாம்.

**பயிர் சுழற்சி முறை :** கோடை உழவு பயிர் சுழற்சி முறையில் ஒருங்கிணைக்கப்படும் போது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இது பூச்சிகள் மற்றும் நோய்க்கிருமிகளின் வாழ்க்கைச் சுழற்சி களை உடைக்க உதவுகிறது மற்றும் குறிப்பிட்ட நோய்த் தடுப்பூசியின் உருவாக்கத்தைக் குறைக்கிறது.

**சாகுபடியை தவிர்த்தல் :** சில சூழ்நிலைகளில், கோடை உழவு சாத்தியமற்றதாகவோ அல்லது விரும்பத்தக்கதாகவோ இருக்காது, குறிப்பாக மண்ணின் ஈரப்பதத்தை பராமரிக்கவும், மண் அரிப்பைக் குறைக்கவும் இலக்கு இருந்தால், இந்த சந்தர்ப்பங்களில், மூடு பயிர்கள் மற்றும் குறைக்கப்பட்ட உழவு முறைகள் போன்ற மாற்று அணுகுமுறைகள் பயன்படுத்தப்படலாம்.



**விளைவுகள் :** கோடை உழவு என்பது விவசாயத்தில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கு நேர சோதனை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த அணுகுமுறையாகும். வாழ்விடங்களை சீர்குலைப்பதன் மூலமும், மக்கள் தொகையைக் குறைப்பதன் மூலமும், பூச்சிகள் மற்றும் நோய்க்கிருமிகளின் சிதைவை ஊக்குவிப்பதன் மூலமும், இரசாயனக் கட்டுப்பாட்டு முறைகளுக்கு நிலையான மாற்றாக இது வழங்குகிறது. ஒரு IPDM கட்டமைப்பில் ஒருங்கிணைக்கப்படும் போது, கோடை உழவு மேம்படுத்தப்பட்ட மண் ஆரோக்கியம், குறைக்கப்பட்ட பூச்சிக்கொல்லி பயன்பாடு மற்றும் அதிக நெகிழக் கூடிய விவசாய அமைப்புகளுக்கு பங்களிக்கிறது, இறுதியில் உணவு பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஆதரிக்கிறது. விவசாய நிலப்பரப்பு தொடர்ந்து உருவாகி வருவதால், கோடை உழவு மற்றும் பிற நிலையான நடைமுறைகளை பரவலாக ஏற்றுக்கொள்வது நவீன விவசாயத்தின் சவால்களை எதிர்கொள்ள முக்கியமானது.

மேலும் விபரங்களுக்கு : **ம.ஜெயராணி, துணை பேராசிரியர் (உழவியல் துறை), புஷ்கரம் வேளாண் மற்றும் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை, ப.அருண்குமார், உதவி பேராசிரியர் (வேளாண் காலநிலை மற்றும் ஆராய்ச்சி துறை), நாளந்தா வேளாண்மை கல்லூரி, திருச்சி, க.கலைச்செல்வி, உதவி பேராசிரியர் (உழவியல் துறை), வேளாண் அறிவியல் நிலையம், விருத்தாச்சலம், பெ.முரளி சங்கர், உதவி பேராசிரியர் (பயிர் நோயியல் துறை), புஷ்கரம் வேளாண் மற்றும் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை.**

# மரபணு மாற்றம் செய்யப்பட்ட மக்காச்சோள விதைகள் இருப்பு குறித்த திடீராய்வு

புதுக்கோட்டை, பிப்.19

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தனியார் விதை விற்பனை நிலையங்களில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட மக்காச்சோள விதைகள் ஏதும் விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்து திடீராய்வு ஆக புதுக்கோட்டை விதை ஆய்வு துணை இயக்குநர் சுஜாதா மற்றும் விதை ஆய்வாளர்கள் உள்ளிட்ட குழுவினர் 19.02.25 அன்று ஆய்வு செய்தனர்.

சென்னை விதை சான்றளிப்பு மற்றும் உயிர்ம சான்றளிப்பு இயக்குநரின் உத்தரவின் பேரில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட மக்காச்சோள விதைகள் ஏதும் விதை விற்பனை நிலையங்களில் விவசாயிகளிடம் விற்பனை செய்யப்படுகிறதா என கைகாட்டி, கீரமங்கலம், அறந்தாங்கி, புதுப்பட்டி, அரிமளம், புதுக்கோட்டை, ஆலங்குடி மற்றும் கந்தர்வக்கோட்டை, பகுதியில் உள்ள தனியார் விதை விற்பனை நிலையங்களில் திடீராய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து ஆய்வின்போது விதை விற்பனையில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படுகிறதா? என ஆய்வு செய்யப்பட்டது. விதை இருப்பு பதிவேடு, விற்பனை பட்டியல்கள் பிற மாநிலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் விதைகளை விற்பனை செய்வதற்கான அனுமதி சான்று போன்ற ஆவணங்கள் இல்லாமல் விதை விற்பனை செய்வது விதைகள் சட்டம் 1966 படி குற்றமாகும்.

ஆய்வின் போது விவசாயிகள் உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் மட்டுமே விதைகள் வாங்க வேண்டும் எனவும் விதைகள் வாங்கும் போது விற்பனை பட்டியலில் விவசாயி பெயர், முகவரி, ரகம், குவியல் எண், காலாவதி நாள் போன்ற விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டு விவசாயியின் கையொப்பம் பெற்று வாங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

விதைகள் இருப்பு மற்றும் விலை விவரத்தினை விவசாயிகளுக்கு நன்கு தெரியும் படி எழுதி வைக்க அறிவுறுத்தப்பட்டது. விதை சேமிப்பு கிடங்குகள் சுத்தமான முறையில் பராமரிக்க வேண்டும் எனவும் உர மூட்டைகளுக்கும் விதைப் பைகளுக்கும் இடையே உரிய இடைவெளி விட்டு அடுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என ஆய்வு செய்யப்பட்டது.

அரசு பதிவுச் சான்று பெறப்பட்ட விதை குவியல்களை மட்டுமே வாங்கி விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப் பட்டது. இன்றைய ஆய்வில் 22 தனியார் விதை விற்பனை நிலை யங்களில் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட மக்காச்சோள விதைகள் ஏதும் விற்பனை செய்யப்பட வில்லை என கண்டறியப்பட்டது. மேலும், ஆய்வில் இருப்பில் இருந்த 15 நெல், உளுந்து மற்றும் எள் விதை குவியல்களில் விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு புதுக்கோட்டை விதை பரிசோதனை நிலையத்திற்கு முளைப்புத்திறன் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

மேலும், விதை விற்பனையாளர்கள் சட்ட விதிகளுக்குட்பட்டு விதை வணிகம் செய்ய வேண்டும் எனவும், விதைச் சட்டத்திற்கு புறம்பாக விதைகள் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டால் விதைகள் சட்டம் 1966 ன் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என புதுக்கோட்டை விதை ஆய்வு துணை இயக்குநர் சுஜாதா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## விவசாயத்தில் உயிர் உரங்கள் பயன்படுத்துவதின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



இராமநாதபுரம், பிப்.19

இராமநாதபுரம் வட்டாரம் வேளாண்மை துறை சார்பில் வேளாண்மை தொழில் நுட்ப முகமை மூலம் காருகுடி கிராமத்தில் மாதிரி கிராமம் செயல்பாடுகள் முகாம் நடைபெற்றது.

இதில் வேளாண்மை உதவி இயக்குநர் தர கட்டுப்பாடு அம்பேத்கர் மற்றும் வேளாண் அலுவலர் தமிழ் தலைமையில் நெல் தரிசு உளுந்து பயிர் சாகுபடி செய்முறை பற்றி, தோட்டக்கலை பயிர்கள் (மிளகாய், தென்னை, மாமரம்) அரசு இயந்திர வாடகை தொடர்பான தகவல்கள், பண்ணை குட்டைகள் அமைத்தல், மீன் வளர்ப்பு பற்றி பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியின் போது நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி (RAWE) மூலம் விவசாய மக்களுக்கு விவசாயத்தில் உயிர் உரங்கள் பயன்படுத்துவதின் முக்கியத் துவத்தையும் அதை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

# தேனி மாவட்டத்தில் ரூ.1.50 லட்சம் மதிப்புள்ள விதைகளுக்கு விற்பனை தடை



தேனி, பிப்.19

தேனி மாவட்டத்தில், ஆண்டிபட்டி, சின்னமனூர், சின்ன ஓவலாபுரம், போடி, இராசிங்கபுரம், பத்ரகாளி புரம் பகுதிகளில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் மதுரை விதை ஆய்வு துணை இயக்குனர் சு.வாசுகி, தேனி மற்றும் உத்தமபாளையம் விதை ஆய்வாளர்கள் முத்துராணி மற்றும் சத்யா ஆகியோர் மரபணு மாற்றம் செய்யப்பட்ட மக்காச்சோள விதைகள் ஏதும் விற்பனை செய்யப்படுகிறதா? என்று திடீராய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் போது விதை விற்பனையில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படுகிறதா? என ஆய்வு செய்யப்பட்டது. விதை இருப்பு பதிவேடு, விற்பனை பட்டியல்கள் பிற மாநிலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் விதைகளை விற்பனை செய்வதற்கான அனுமதி சான்று போன்ற ஆவணங்கள் இல்லாமல் விதை விற்பனை செய்வது விதைகள் சட்டம் 1966 படி குற்றமாகும். விதைகள் சட்டம் 1966ன் படி விதைகள் விற்பனை செய்யப்படுகிறதா? என ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் ஆய்வின் போது விவசாயிகள் உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் மட்டுமே விதைகள் வாங்க வேண்டும் எனவும் விதைகள் வாங்கும் போது விற்பனை பட்டியலில் விவசாயி பெயர், முகவரி, ரகம், குவியல் எண், காலாவதி நாள் போன்ற விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டு விவசாயியின் கையொப்பம் பெற்று வாங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. விதைகள் இருப்பு மற்றும் விலை விவரத்தினை பொதுமக்களுக்கு நன்கு தெரியும் படி எழுதி வைக்க அறிவுறுத்தப்பட்டது. விதை சேமிப்பு கிடங்குகள் சுத்தமான முறையில் பராமரிக்க வேண்டும் எனவும் உர மூட்டைகளுக்கும் விதைப்பைகளுக்கும் இடையே உரிய இடைவெளி விட்டு அடுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என ஆய்வு செய்யப்பட்டது. விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை இயக்குனரால் வழங்கப்படும் பதிவு சான்று இல்லாத ரூ.1,51,240/- (ஒரு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) மதிப்புள்ள 20.215 கி.கி காய்கறி விதைகளுக்கும் விற்பனை தடை விதிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட விதை விற்பனை நிறுவனங்களின் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பதிவுச் சான்று காலம் முடிவு பெற்ற விதை குவியல்களை இருப்பில் வைக்கக் கூடாது எனவும் அவற்றை உற்பத்தியாளரிடமே திருப்பி அனுப்பி விட்டு பதிவுச் சான்று பெறப்பட்ட விதை குவியல் களை மட்டுமே வாங்கி விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. ஆய்வில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட மக்காச்சோள விதைகள் ஏதும் விற்பனை செய்யப்படவில்லை என கண்டறியப்பட்டது.

மேலும், விதை விற்பனையாளர்கள் சட்ட விதிகளுக்குட்பட்டு விதை வணிகம் செய்ய வேண்டும் எனவும், விதைச் சட்டத்திற்கு புறம்பாக விதைகள் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டால் விதைகள் சட்டம் 1966ன் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

# விவசாயிகளுக்கு விதை நேர்த்தி பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



இராமநாதபுரம், பிப்.19

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அருகே உள்ள பெருங்கரை கிராமத்தில் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி மாணவர்கள் பெருங்கரை ஊராட்சி கீழப்பெருங்கரை கிராமத்தில் உள்ள விவசாயிகளை சந்தித்து விதை நேர்த்தி மற்றும் விதை விதைப்பு முறைகள் அதன் நன்மைகள் பற்றி பயிற்சி அளித்தனர். இதில் விவசாயிகள் தங்கள் சந்தேகங்களை மாணவர்களிடம் கேட்டு அறிந்து கொண்டனர் மற்றும் மாணவர்களும் விவசாயிகளி டமிருந்து அவர்களின் விதை விதைப்பு முறைகள் பற்றியும் கற்றுக் கொண்டனர். இக்கூட்டத்தில் கீழப்பெருங்கரை கிராம விவசாயிகள் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.



# மிளகாயில் மகசூல் அதிகரிக்க விதை பரிசோதனை அவசியம்

இராமநாதபுரம், பிப்.19

பணப் பயிர்களில் ஒன்றான மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரும்பாலும் தங்களுக்கு தேவையான விதை களை தாங்களே சாகுபடி செய்து சேமித்து வைத்து கொள் கிறார்கள். பயிரிடும் பயிரின் மகசூல் விதையின் தரத்தை பொறுத்தே அமையும். அதனால் நாம் தேர்ந்தெடுக்கும் விதையானது பாரம்பரியத் தூய்மை, பிற இனக்கலப் பில்லாததும், பிறப்பயிர் மற்றும் களை விதைகள் கலப்பு இன்றி அதிக சுத்தத் தன்மை உடையதும், அதிக முளைப்புத்திறனும் வீரியமும், நோய் தாக்காத விதைகளாகவும் இருக்க வேண்டும்.

மிளகாய் விதைப் பயிரானது பிற ரக வயல்களில் இருந்து குறைந்தது 200 மீட்டர் தூரம் தனிமைப் பட்டிருக்க வேண்டும். விதைக்காக அறுவடை செய்யும்போது காய்கள் நன்கு பழுத்து முழுவதும் சிவப்பு நிறமாக மாறிய பின்புதான் அறுவடை செய்ய வேண்டும். அப்போது தான் விதைகள் நன்கு முதிர்ச்சி அடைந்து நல்ல முளைப்பு மற்றும் வீரியத் திறனுடன் இருக்கும்.

மிளகாய்ப் பயிரில் அறுவடை ஒரே அறுவடையாக இல்லாமல் பல அறுவடைகளாக எடுப்பதால் அவற்றில் முதல் மற்றும் கடைசி ஓரிரு அறுவடைகளை தவிர்த்து இடைப்பட்ட அறுவடைகளில் இருந்து வரும் பழங்களில் இருந்து மட்டுமே விதைகள் எடுக்கவேண்டும்.

விதை உற்பத்தியில் எவ்வளவு கவனம் தேவையோ அதே அளவு கவனம் விதைகளை அடுத்த விதைப்பு பருவம் வரை சேமித்து வைப்பதிலும் தேவைப்படுகிறது. விதையின் ஈரப் பதத்தை பொறுத்து விதையின் தரம் மாறுபடுகிறது. விதையின் ஈரப்பதம் அதிகமாக இருந்தால் விதைகளின் முளைப்புத்திறன் குறைந்து மகசூல் இழப்பு ஏற்படும். குறைந்த கால சேமிப்புக்கு விதைகளை 7-8 சத ஈரப்பதத்திற்கு காய வைத்து துணிப் பைகளில் நிறைத்து சேமித்து வைக்கலாம். நீண்டகாலம் விதைகளை சேமிக்க விதைகளின் ஈரப்பதத்தை 6 சதவீதம் அளவிற்கு குறைத்து காற்று புகாத பாலித்தீன் பைகளில் சேமித்து வைக்கலாம். விதைகளின் முளைப்புத்திறனானது 60 சதவீதத்திற்கும் குறையாமல் இருக்க வேண்டும்.

விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து சேமித்து வைப்பது நல்லது. விதைப்பரிசோதனை செய்ய 10 கிராம் மிளகாய் விதைகளை உரிய விபரங்களுடன் பரமக்குடி ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- கட்டணமாக செலுத்தி விதை பரிசோதனை செய்து கொள்ளலாம் என விதை பரிசோதனை அலுவலர் ம.மகாலட்சுமி மற்றும் வேளாண்மை அலுவலர் ச.முருகேஸ்வரி ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

# அட்மா திட்டத்தின் கீழ் சோலார் ஆற்றலின் பயன்பாடுகள்

கிருஷ்ணகிரி, பிப்.19

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாரம், ஜம்புகுட்டப்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு சோலார் ஆற்றலின் பயன்பாடுகள் குறித்து ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது.

வேளாண் வணிக மற்றும் விற்பனை துறைச்சார்ந்த வேளாண்மை அலுவலர் சுமிதா சூரிய ஆற்றல் என்பது சுத்தமான, பசுமையான ஆற்றல் மூலமாகும். சூரிய சக்தியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை விவசாய அல்லது சாகுபடி கருவிகளுக்குப் பயன்படுத்துகிறது. சூரிய சக்தி மூலம் நீர் பம்பிங் அமைப்பு, சூரிய உலர்த்தி, சூரிய சக்தி பசுமை இல்லம், சூரிய மின்வேலி, சூரிய சக்தி பால் கறக்கும் இயந்திரம், சூரிய சக்தி இயந்திரங்கள் மற்றும் டிராக்டர்கள் பயன்படுகின்றனர்.

சூரிய சக்தினால் வறட்சி தொடர்பான பிரச்சினைக்கு ஒரு பயனுள்ள தீர்வாகவும் ,பிற்கால பயன்பாட்டிற்காக ஆற்றலைச் சேமித்தல், புவிவெப்பமடைதலைத் தடுக்க உதவுகிறது. வேளாண் வணிக மற்றும் விற்பனை துறை உதவி வேளாண் அலுவலர், குமார் தேசிய வேளாண் மின்னணு சந்தை குறித்த விளக்கினார்.

உதவி விதை அலுவலர் தனப்பால், விதைப்பண்ணை அமைப்பதன் முக்கியத்துவம் பற்றியும், தரமான விதைகளை தேர்ந்தெடுக்கும் முறைகள், விதைச்சான்றளிப்பின் நோக்கம் பற்றி கூறினார். வேளாண்துறை திட்டங்கள் குறித்து உதவி வேளாண்மை அலுவலர் வீரமணி எடுத்துக் கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பரசு உழவன் செயலியின் பயன்பாடுகள் குறித்து விளக்கினார்.

இப்பயிற்சிகான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சண்முகம் மற்றும் கிரிஜா செய்தனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.